Dr. A. Vennila - Principal
Thanjavur District

HSS

**10 - ஆம் வகுப்பு**

# அரையாண்டுத் தேர்வு – 2024

# தமிழ்

காலம் : 15 நிமிடம் : 3.00 மணி | மதிப்பெண்கள் : 100

## பகுதி I (மதிப்பெண்கள்: 15)

அ) சரியான விடையைத் தேர்வு செய்க 15×1=15

1. காய்ந்த இலையும், காய்ந்த தோகையும் நிலத்துக்கு நல்ல உரங்கள். இத்தொடரில் அடிக்கோடிட்ட பகுதி குறிப்பிடுவது
   அ) இலையும், சருகும் ஆ) தோகையும் சண்டும் இ) தாளும் ஓலையும் ஈ) சருகும் சண்டும்
2. கட்டுரையைப் படித்து, ஆசிரியர் மாணவர்களுக்குப் பரிசு வழங்கினார் இத்தொடரில் இடம் பெற்றுள்ள வேற்றுமை உருபுகள்
   அ) ஐ, ஆல் ஆ) ஆல், கு இ) ஐ, கு ஈ) இன், கு
3. ஆண் குழந்தையை 'வாடிச் செல்லம்' என்று கொஞ்சுவது
   அ) பால் வழுவமைதி ஆ) திணை வழுவமைதி இ) மரபு வழுவமைதி ஈ) கால வழுவமைதி
4. பாரத ஸ்டேட் வங்கியின் உரையாடு மென்பொருள் எது?
   அ) துலா ஆ) சீலா இ) குலா ஈ) இலா
5. குயில்களின் கூவலிசை புள்ளினங்களின் மேய்ச்சலும் இலைகளின் அசைவுகள், நறைக்காற்றின் ஆலோலம்
   அ) மொட்டின் வருகை ஆ) வனத்தின் நடனம் இ) உயிர்ப்பின் ஏக்கம் ஈ) நீரின் சிலிர்ப்பு
6. சுதந்திர இந்தியாவின் மகத்தான சாதனையும் சவாலுமாக ஜெயகாந்தன் கருதுவது
   அ) அரசின் நலத்திட்டங்களைச் செயல்படுத்துதல் ஆ) பெற்ற சுதந்திரத்தைப் பேணிக்காத்தல்
   இ) அறிவியல் முன்னேற்றம் ஈ) வெளிநாட்டு முதலீடுகள்
7. தமிழினத்தை ஒன்றுபடுத்தும் இலக்கியமாக ம.பொ.சி. கருதியது.
   அ) திருக்குறள் ஆ) புறநானூறு இ) கம்பராமாயணம் ஈ) சிலப்பதிகாரம்
8. இரு நாட்டு அரசர்களும் தும்பைப் பூவைச் சூடிப் போரிடுவதன் காரணம் அ) நாட்டைக் கைப்பற்றல்
   ஆ) ஆநிரை கவர்தல் இ) வலிமையை நிலைநாட்டல் ஈ) கோட்டையை முற்றுகையிடல்
9. எய்துவர் எய்தாப் பழி - இக்குறளடிக்குப் பொருந்தும் வாய்பாடு எது?
   அ) கூவிளம் தேமா மலர் ஆ) கூவிளம் புளிமா நாள் இ) தேமா புளிமா காசு ஈ) புளிமா தேமா பிறப்பு
10. கூற்று : 1போராட்டப் பண்புடனே வளர்ந்தவர் கலைஞர்.
    கூற்று 2: அவருக்குள் இருந்த கலைத்தன்மை வளர அது உதவியது
    அ) கூற்று 1 சரி 2 தவறு ஆ) கூற்று 1 மற்றும் 2 தவறு இ) கூற்று 1 தவறு 2 சரி ஈ) கூற்று1 மற்றும் 2 சரி
11. மெய்கீர்த்தி என்பது
    அ) புலவர்களால் எழுதப்பட்டுக் கல்தச்சர்களால் கல்லால் பொறிக்கப்படுபவை
    ஆ) மன்னர்களின் புகழை ஓலைச் சுவடிகளில் எழுதி வைப்பது.
    இ) ஒருவரது புகழைப் புலவர்கள் புகழ்ந்து பாடும் இலக்கிய வகை ஈ) அறக்கருத்துகள் அடங்கிய நூல்

**பாடலைப் படித்து வினாக்களுக்கு (12, 13, 14, 15) விடையளிக்க.**

*"சக்தி குறைந்து போம், அதனை அவித்து விடாதே*
*பேய்போல வீசி அதனை மடித்து விடாதே*
*மெதுவாக, நல்ல லயத்துடன், நெடுங்காலம்*
*நின்று வீசிக் கொண்டிரு*
*உனக்கு பாட்டுகள் பாடுகிறோம்*
*உனக்கு புகழ்ச்சிகள் கூறுகிறோம்"*

12. இப்பாடலில் இடம் பெற்றுள்ள 'லயத்துடன்' என்ற சொல்லின் பொருள்
அ. சுழலாக ஆ. கடுமையாக இ. சீராக ஈ. வேகமாக
13. பாடலில் இடம் பெற்றுள்ள இயைபுச் சொற்களைத் தேர்க
அ. அவித்து விடாதே, நெடுங்காலம் ஆ. மடித்து விடாதே, பாடுகிறோம்
இ. மெதுவாக, லயத்துடன் ஈ. பாடுகிறோம், கூறுகிறோம்
14. இக்கவிதையை இயற்றியவர் அ.திரு.வி.க ஆ. பாரதியார் இ. பாரதிதாசன் ஈ.மு.மேத்தா
15. 'நெடுங்காலம்' என்ற சொல்லைப் பிரித்தால் கிடைப்பது ___
அ. நெடுமை + காலம் ஆ. நெடிய + காலம் இ. நெடு + காலம் ஈ. நெடுங் + காலம்

பகுதி - II (மதிப்பெண்கள்: 18)

பிரிவு - 1

**எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளிக்க** 4 × 2 = 8
**(21 ஆவது வினாவிற்கு கட்டாயமாக விடையளிக்க வேண்டும்)**

16. **விடைக்கேற்ற வினா அமைக்க**
அ. விருந்தோம்பலை வலியுறுத்த ஓர் அதிகாரமே திருக்குறளில் அமைந்திருக்கிறது.
ஆ. சதாவதானம் என்னும் கலையில் சிறந்து விளங்கியவர் செய்குதம்பிப் பாவலர்
17. குறிப்பு வரைக - அவையம்
18. விருந்தினர்களை மகிழ்வித்துக் கூறும் முகமன் சொற்களை எழுதுக
19. தமிழ்நாட்டில் மட்டும் விளையக்கூடிய சிறுகூலங்களின் பெயர்களை எழுதுக
20. மெய்க்கீர்த்திப் பாடுவதன் நோக்கம் யாது?
21. தரும் - என முடியும் குறளை எழுதுக.

பிரிவு - 2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்** 5 × 2 = 10

22. குறள்வெண்பாவின் இலக்கணத்தை எடுத்துக்காட்டுடன் எழுதுக.
23. பாரதியார் கவிஞர், நூலகம் சென்றார், அவர் யார்? - ஆகிய தொடர்களில் எழுவாயுடன் பயனிலைகள் யாவை?
24. பகுபத உறுப்பிலக்கணம் தருக : அமர்ந்தான்.
25. மரபுத் தொடரைப் பொருத்தமான தொடரில் அமைத்து எழுதுக
அ) அள்ளி இறைத்தல் ஆ) ஆறப்போடுதல்
26. கூட்டப் பெயர்களை எழுதுக
(அ) கல் (ஆ) ஆடு
27. **இரு சொற்களையும் ஒரே தொடரில் அமைத்து எழுதுக**
(அ) விடு - வீடு (ஆ) கொடு - கோடு
**குறிப்பு :- செவி மாற்றுத் திறனாளர்களுக்கான மாற்று வினா தொடரில் விடுபட்ட சொற்கள் குறிக்கும் வண்ணங்களின் பெயர்களை எழுதுக**
கண்ணுக்கு குளுமையாக இருக்கும் __ புல்வெளிகளில் கதிரவனின் ___ வெயில் பரவிக் கிடக்கிறது.
28. புறத்திணைகளில் எதிரெதிர் திணைகளை அட்டவணைப்படுத்துக.

பகுதி - III (மதிப்பெண்கள்-18) பிரிவு - I

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க** 2 × 3 = 6

29. "புளியங்கன்று ஆழமாக நடப்பட்டுள்ளது" - இது போல் இளம் பயிர்வகை ஐந்தின் பெயர்களைத் தொடரில் அமைத்து எழுதுக.
30. **உரைப் பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக**

தமக்கே உரிய தனிநடையால் தமிழரை மேடை நாடகங்களின் பக்கம் ஈர்த்தார் கலைஞர் . அவர் எழுதிய 'பழநியப்பன்' என்னும் முதல் நாடகம் , 1944 ஆம் ஆண்டு அரங்கேற்றப்பட்டது . அதனைத் தொடர்ந்து 'சாம்ராட் அசோகன், மணிமகுடம், வெள்ளிக்கிழமை, காகிதப் பூ உட்பட பல நாடகங்களை எழுதினார் : தான் எழுதிய 'தூக்கு மேடை' என்னும் நாடகத்தில் நடிகர் எம் .ஆர். இராதாவின் வேண்டுகோளுக்காக மாணவர் தலைவராக கருணாநிதி நடித்தார் . அந்நாடகத்திற்கான பாராட்டு விழாவில் தான் அவருக்கு 'கலைஞர்' என்னும் சிறப்புப் பெயர் வழங்கப்பட்டது.

அ) கலைஞர் எழுதிய முதல் நாடகம் எது?
ஆ) தூக்கு மேடை நாடகத்தில் யாருடைய வேண்டுகோளுக்காக மாணவத் தலைவராக கலைஞர் நடித்தார்?
இ) கலைஞர் என்ற சிறப்புப்பெயர் எப்போது வழங்கப்பட்டது?

31. "தலையைக் கொடுத்தேனும் தலைநகரைக் காப்போம்" - இடம் சுட்டிப் பொருள் விளக்குக.

## பிரிவு - II

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்கவும் 2×3=6
(34 ஆவது வினாவிற்கு கட்டாயம் விடையளிக்க வேண்டும்)

32. மன்னன் இடைக்காடனார் என்ற புலவனுக்குச் சிறப்பு செய்தது ஏன்? விளக்குக.
33. எவையெல்லாம் அறியேன் என்று கருணையன் கூறுகிறார்?
34. அ) "அருளைப் பெருக்கி" எனத் தொடங்கும் நீதிவெண்பா அடிமாறாமல் எழுதுக. (அல்லது)
ஆ) "தூசும் துகிரும்" எனத் தொடங்கும் சிலப்பதிகாரப் பாடலை எழுதுக.

## பிரிவு - III

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடையளிக்க 2×3=6

35. கண்ணே கண்ணுறங்கு!
காலையில் நீயெழும்பு!
மாமழை பெய்கையிலே
மாம்பூவே கண்ணுறங்கு!
பாடினேன் தாலாட்டு!
ஆடி ஆடி ஓய்ந்துறங்கு! - இத்தாலாட்டுப் பாடலில் அமைந்துள்ள தொடர் வகைகளை எழுதுக.

36. தொழுதகை யுள்ளும் படையொடுங்கும் ஒன்னார்
அழுதகண் ணீரும் அனைத்து - இக்குறட்பாவினை அலகிட்டு வாய்பாடு தருக.

37. "வேலொடு நின்றான் இடுவென் றதுபோலும்
கோலொடு நின்றான் இரவு" - இக்குறளில் பயின்று வரும் அணியை விளக்குக.

## பகுதி - IV (மதிப்பெண்கள்: 25)

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க 5 × 5 = 25

38. அ) வள்ளுவம், சிறந்த அமைச்சருக்குக் கூறிய இலக்கணங்கள் நமக்கும் பொருந்துவதை குறள் வழி விளக்கு (அல்லது) ஆ) முல்லைப் பாட்டில் உள்ள கார்காலச் செய்திகளை விவரித்து எழுதுக.

39. மாநில அளவில் நடைபெற்ற "மரம் இயற்கையின் வரம்" எனும் தலைப்பிலான கட்டுரைப் போட்டியில் வெற்றி பெற்று முதல் பரிசு பெற்ற தோழனை வாழ்த்தி மடல் எழுதுக. (அல்லது)
ஆ. உங்கள் பகுதியில் தேங்கியுள்ள மழைநீரை அகற்றவும் புதை சாக்கடைத் தூர்வாரவும் வேண்டி நகராட்சி ஆணையருக்குக் கடிதம் ஒன்று எழுதுக.

40. படம் உணர்த்தும் கருத்தை கவினுற எழுதுக.



41. வீட்டு எண் : 12. ராஜவீதி, மேட்டுப்பட்டி, சேலம் என்ற முகவரியில் வசிக்கும் வெங்கடேசன்மகன் பாலாஜி, சேலம் மாவட்டத்தில் அரசு மேல்நிலைப் பள்ளியில் பத்தாம் வகுப்பினை நிறைவு செய்து மேல்நிலை வகுப்பில் உயிரியல் பாடப்பிரிவில் சேர விரும்புகிறார். தேர்வர் தன்னை பாலாஜியாக கருதி கொடுக்கப்பட்ட மேல்நிலை வகுப்புச் சேர்க்கை விண்ணப்பப் படிவத்தினை நிரப்புக.

42. அ) நயம் பாராட்டுக-
நிலாவையும் வானத்து மீனையும் காற்றையும்
நேர்ப்பட வைத்தாங்கே
குலாவும் அமுதக் குழம்பைக் குடிதொரு
கோல வெறிபடைத்தோம்;
உலாவும் மனச்சிறு புள்ளினை எங்கணும்
ஓட்டி மகிழ்ந்திடுவோம்;
பலாவின் கனிச்சுளை வண்டியில் ஓர் வண்டு
பாடுவதும் வியப்போ?

-பாரதியார் (அல்லது)

ஆ) மொழிபெயர்க்க.

The Golden sun gets up early in the morning and starts its bright rays to fade away the dark.The milky clouds start their wandering.The colourful birds start twitting their morning melodies in percussion.The cute butterflies dance around the flowers. The flowers fragrance fills the breeze. The breeze gently blows everywhere and makes everything pleasant.

குறிப்பு: குறிப்பு: செவிமாற்றுத் திறனாளர்களுக்கான மாற்று வினா உரைப் பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.

பூக்களைப் பற்றிய அரிய இலக்கியச் செய்திகள்

பூ, உண்டு. ஆனால் கண்ணிற்குக் காட்சி தராமல் காண்டற்கு அரியவாய் இருக்கும் மலர்கள்: ஆலமலர், பலாமலர்.

மலர் உண்டு: பெயரும் உண்டு: ஆனால் இது தான் அது என்று உறுதியாக அறிய இயலாதுள்ள நிலையில் இருக்கும் மலர்கள்: சுள்ளி மலர், பாங்கர் மலர்.

அகவிதழ் முதலிய உறுப்புகள் இருந்து அவை புறத்தே காட்சிப்படாமல் உள்ளேயே பொதிந்திருக்கும் மலர்கள்: அத்தி, ஆலம், கொழிஞ்சி, பலா.

பயன்பாடு நாற்றம், மக்களது விருப்பில் இடம் பெறாமை, பொதுவில் ஒதுக்கப்பட்டமை கொண்டு மலரில் சில எளியவை ஆகின்றன. அவையாவன: நெருஞ்சி, எருக்கு, பூளை, குரீஇப்பூளை, வேளை, ஊமத்தம், கள்ளி, முருங்கை.

இலுப்பைப் பூக்கள் இனிப்பானவை. கரடிகள் மரத்தின் மீதேறி அவற்றைப் பறித்து உண்ணும். பாதிரிப்பூ, குடிநீருக்குத் தன்மணத்தை ஏற்றும். மூங்கில் பூ, வில்காய் தோன்றிக் கனியாகி அதிலிருந்து ஒருவகை அரிசி தோன்றும். இது மூங்கில் அரிசி எனப்படும்.

(i). கண்ணிற்குக் காட்சி தராமல் காண்பதற்கு அரியனவாய் இருக்கும் மலர்கள் எவை?
(ii). புறத்தே காட்சிப்படாமல் உள்ளே பொதிந்திருக்கும் மலர்கள் யாவை? (iii). இனிப்பான பூக்கள் எது?
(iv) எந்தப் பூ குடிநீருக்கு மணத்தை ஏற்றும்? (v) மூங்கில் அரிசி என்றால் என்ன?

## பகுதி - V (மதிப்பெண்கள்: 24)

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க $3 \times 8 = 24$

43. அ) கருணையன் தாய் மறைவுக்கு வீரமாமுனிவர் பூக்கள் போன்ற உவமைகளாலும் உருவக மலர்களாலும் நிகழ்த்திய கவிதாஞ்சலியை விவரிக்க. (அல்லது)
ஆ) தமிழின் சொல்வளம் பற்றியும் புதிய சொல்லாக்கத்திற்கான தேவை குறித்தும் தமிழ் மன்றத்தில் பேசுவதற்கான உரைக் குறிப்புகளை எழுதுக.

44. அ) " அறிவியலாளர் ஸ்டீபன் ஹாக்கிங்குடன் விண்வெளிப் பயணம்" என்னும் தலைப்பில் கற்பனைக் கதை ஒன்று எழுதுக. (அல்லது) ஆ) அன்னமய்யா என்னும் பெயருக்கும், அவரின் செயலுக்கும் உள்ள பொருத்தப்பாட்டினைக் ' கோபல்லபுரத்து மக்கள் ' கதைப் பகுதி கொண்டு விவரிக்க.

45. அ) குறிப்புகளைக் கொண்டு ஒரு பக்க அளவில் நாடகம் எழுதுக.
மாணவன் - கொக்கைப் போல, கோழியைப் போல - உப்பைப் போல - இருக்க வேண்டும் - கொக்கு காத்திருந்து கிடைக்கும் வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ளும் - குப்பையைக் கிளறினாலும் தனது உணவை மட்டுமே எடுத்துக் கொள்ளும் கோழி - கண்ணுக்குத் தெரியாவிட்டாலும் உப்பின் சுவையை உணரமுடியும் - ஆசிரியர் விளக்கம் - மாணவன் மகிழ்ச்சி. (அல்லது)
ஆ) தங்களுக்குப் பிடித்த நூல் ஒன்றை கீழ்க்காணும் குறிப்பைப் பயன்படுத்திக் கட்டுரை வரைக.
(முன்னுரை - நூலின் அமைப்பு - நூல் கூறும் கருத்துகள் - நூலின் சிறப்பு - நூலின் நயம் - முடிவுரை.)

# மேல்நிலை வகுப்பு - சேர்க்கை விண்ணப்பம்

சேர்க்கை எண்: நாள்: வகுப்பும் பிரிவும்:

1. மாணவ / மாணவியின் பெயர் :
2. பிறந்த நாள் :
3. தேசிய இனம் :
4. பெற்றோர் / பாதுகாவலர் பெயர் :
5. வீட்டு முகவரி :
6. இறுதியாகப் படித்து முடித்த வகுப்பு :
7. பயின்ற மொழி :
8. பெற்ற மதிப்பெண்கள் :
9. இறுதியாகப் படித்த பள்ளியின் முகவரி :

| தேர்வின் பெயர் | பதிவு எண் - ஆண்டு | பாடம் | மதிப்பெண் (100) |
|---|---|---|---|
| | | தமிழ் | |
| | | ஆங்கிலம் | |
| | | கணிதம் | |
| | | அறிவியல் | |
| | | சமூக அறிவியல் | |
| | | மொத்தம் | |

10. மாற்றுச் சான்றிதழ் இணைக்கப்பட்டுள்ளதா? :
11. தாய்மொழி :
12. சேர விரும்பும் பாடப் பிரிவும் பயிற்று மொழியும்:

மாணவ / மாணவியின் கையெழுத்து